**OS. 25/2023**

**நாள். 12.03.2026.**

**பி.வா.சா.3 – ராமச்சந்திரன் த.பெ.மாயழகு**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரிதான் என்னுடைய நிரந்தர முகவரி. ஆரம்ப காலத்திலிருந்து அந்த முகவரியில்தான் வசித்து வருகிறேன், தற்போது அந்த முகவரியில்தான் வசித்து வருகிறேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் தேவிப்பட்டினம் பஸ்ஸ்டாப் அருகில் நான் வைத்துள்ள கடை எந்த முகவரியில்உள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நிரூபண வாக்குமூலத்தில் எந்த வருடத்திலிருந்து கடை வைத்தேன் என்பது சொல்லவில்லை என்றால் சரிதான். 2005 – 2012 வரை கடை வைத்திருந்தேன். நான் கடை வைத்திருந்தேன் என்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள உயில் சாசனத்தில் 2 வது சாட்சியாக போடப்பட்டவரின் விலாசம் சூரங்கோட்டை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சூரங்கோட்டையில் வாடகைக்கு இருந்தேன். நான் சூரங்கோட்டையில் வாடகைக்குஇருந்தேன் என என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் அதற்கு ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள என் கையெழுத்தும், பி.வா.சா.ஆ.2 உயில் சாசனத்தில் உள்ள 2 வது சாட்சியின் கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் இரண்டும் என் கையெழுத்துதான். நான் பி.வா.சா.ஆ.2 உயில் சாசதனத்தில் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றும், எனக்கு வாதி, பிரதிவாதி குடும்பத்தை தெரியாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு நண்பர் என்பதால் அவர் அழைத்ததின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.